## IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.212/2017 | Village | : | |
| Prosecution witness | : | PW-11 | Taluk | : | |
| Name | : | திருமதி. காயத்ரி | Occupation | : | |
| Father Name | : | திரு. சுப்ரமணியன் | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 06.10.2025**

A1 accused absent. U/sec.355 BNSS petition filed and allowed. A2 present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்சமயம் தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.5.2017 அன்று நான் மேற்கண்ட ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியிலிருந்தபோது தஞ்சாவூர் தெற்கு காவல்நிலைய கு.எண் 155/2017 வழக்கு தொடர்பாக இறந்த ரமேஷ் ஆண் வயது 32, என்பவரது உடல் உள்ளுறுப்புகளான

1) சிறுகுடல், 2) இரைப்பை, 3) கல்லீரல் மற்றும் சிறுநீரகம் மற்றும் பதப்படுத்தும் உப்பு நீர் ஆகியன சரியான மூடி முத்திரையிடப்பட்ட பிரேத பரிசோதனை எண் 665/2017 நாள் 25.5.2017 என குறிக்கபட்டு தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை சட்டம் மருத்துவ பேராசிரியர் அவர்களிடமிருந்து இரசாயன பகுப்பாய்விற்காக தலைமை காவலர் எண் 2100 திரு. மனோகரன் என்பவர் மூலமாக ஆய்வகத்தில் ஒப்படைக்கபட்டது. பெறபட்ட மேற்கண்ட உள்ளுறுப்புகளில் பகுப்பாய்வு மேற்கொண்டது அவை எவற்றிலும் ஆல்ஹகாலோ மற்றும் எவ்வித நச்சுபொருளோ கண்டறியப்படவில்லை. 2.6.2017 நாளிட்ட நஞ்சியல் பகுப்பாய்வு அறிக்கை எண் 472/2017 மேற்கண்ட சட்டம் மருத்துவ பேராசிரியர் அவர்களுக்கு 5.6.2017 அன்று அனுப்பிவைக்கபட்டது. என்னிடம் காண்பிக்கபடும் நஞ்சியல் பகுப்பாய்வு அறிக்கை எண் 472/2017 என்னால் அனுப்பி வைக்கபட்டதுதான் அது **அ.த.சா.ஆ.15** ஆகும்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.